# 05 ஈழத்தமிழன்னை தந்த இருமணிகள்

இருபதாம் நூற்றாண்டு ஈழத்தமிழ் இலக்கியத்தின் மணி முடிகளாய்ப் பிரகாசிப்பவர்கள் பண்டிதமணியும் புலவர்மணியும் ஆவர். தமிழ் மொழி எனும் முத்து மாலையின் இரு சுடர் மணிகளே இவர்கள். ஈழத்திருமாதாவின் வடக்கும் கிழக்கும் கைகோர்ப்பது போல வட மாகாணத்தின் மட்டுவிலில் அவதரித்த சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களும், கிழக்கு மாகாணத்தின் மண்டூரில் உதித்த ஏகாம்பரப்பிள்ளை பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் கைகோர்த்தமை தமிழுலகுக்குக் கிட்டிய பேறாகும். இருபேரும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி முனையில் 1899ஆம் ஆண்டில் பிறந்தவர்கள். இவர்களுள் பண்டிதமணி இளையவர். புலவர்மணி சற்றே மூத்தவர். தமிழ்ப் பாரம்பரியக் கல்வியாலும் மரபு இலக்கியத்தாலும் புடம் போடப்பட்ட இருவரதும் வாழ்க்கை வரலாற்றை இந்நாட்டு வரலாற்றின் ஒரு காலகட்டத்து இலக்கிய வரலாறு எனக் கொள்ளுதல் முறையாகும்.

நமது இலக்கிய வரலாறு நெடுகிலும் புலமையாளர்கள் பலரைக் காண்கிறோம். இலங்கையில் கி . பி 13 ஆம் நூற்றாண்டில் அரசகேசரியில் ஆரம்பிக்கும் இந்நெடும் பயணத்தில் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், சுன்னாகம் வரத பண்டிதர், மாதகல் மயில்வாகனப் புலவர் போன்றோர் போர்த்துக்கேய ஒல்லாந்தர் காலத்தின் புலமைப் பரம்பரையாகத் திகழ்ந்தனர். முத்துக்குமாரக் கவிராயர், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் ஆறுமுகநாவலர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், முருகேச பண்டிதர், நீர்வேலி சிவசங்கர பண்டிதர், கோப்பாய் சபாபதி நாவலர், காசிவாசி செந்திநாதையர், புலோலி நா. கதிரவேற்பிள்ளை, வித்துவசிரோன்மணி பொன்னம்பல பிள்ளை, மட்டுவில் க. வேற்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், மகாலிங்க சிவம், வித்துவான் சுப்பையாபிள்ளை முதலியோர் ஒல்லாந்தர் கால முடிவிலும் ஆங்கிலேயர் காலத் தொடக்கத்திலும் தமிழ்ப் பாரம்பரியக் கல்வியைத் தொடர்ந்தவர்களாவர். இந் நெடும் பயணத்தில் தமிழ்க் கல்வி மரபுக்கு புத்துயிர் பாய்ச்சியவர்களில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சி . வை தாமோதரம் பிள்ளை, சுவாமி விபுலாநந்தர், கனகசபைப்பிள்ளை ஆகியோர் முதன்மையானவர்கள்.

இவர்களின் தமிழ்க் கல்வி மரபினதும் இலக்கியப் பாரம்பரியத்தினதும் நீட்சியாகவே கண்ணின் கருமணியொப்பும் இருமணிகளாம் புலவர்மணியும் பண்டிதமணியும் தென்படுகின்றனர். இருமணிகளான பிள்ளையர் இருவரும் இலக்கிய இரட்டையராக இலங்கை வரலாற்றில் அடையாளம் காணப்படுவதற்கு, அவர்களது உள்ளார்ந்த மனப்பக்குவம், குடும்பப்பின்னணி, சமூகச்சூழல், புலமை நாட்டம், தமிழ் மீதான தீராத பற்றுதல், கொள்கைப் பிடிப்பு என்பன ஒன்றாகக் கலந்த ஆளுமை காரணமாயிற்று.

தென்மராட்சிப் பகுதியில் அமைந்துள்ள மட்டுவில் குக்கிராமமேயாயினும் மரபு வழிக் கல்வியையும், முறைசாரத் தமிழ்ப் புலமையையும் உரமூட்டி வளர்த்து வந்தது. பண்டிதமணியின் தந்தையார் சின்னத்தம்பி அவர்கள் இங்கு தர்மகுணசீலராக விளங்கினார்; புராணங்கள் சொன்னார்; உரை வாசித்தார்; இவ்வாறு தான் பெற்ற அறிவுக் கருவூலத்தை மற்றோருக்கும் ஊட்டி ஞானச் சுடரை ஏற்றினார்.

படுவான் கரைப் பகுதியில் அமைந்துள்ள மண்டூர் நல்ல நீர்வளமும் பயன் மிக்க நிலவளமும் தன்னகம் கொண்ட சிற்றூராகும். இங்கும் மரபு வழிக்கல்வியும் முறைசாராக் கல்வியும் செழிப்புற்றன. புலவர் மணியின் தந்தையார் ஏகாம்பரப்பிள்ளை அவர்கள் பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், திருச்செந்தூர் புராணம் ஆகிய இலக்கியக் கருவூலங்களைத் துறைபோகக் கற்றும் பரப்பியும் அறிவொளி பாய்ச்சினார். இத்தகைய தமிழ்ப்பற்றில் திளைத்த குடும்பங்களில் அவதரித்தமை பிள்ளைகள் இருவரும் பின் நாளில் பெயர்பெற்று விளங்குவதற்கு அடிநாதமாக அமைந்ததென்றால் மிகையில்லை.

வித்துவான் சந்திரசேகர உபாத்தியாயரிடம் தமிழ் கற்கத்தொடங்கிய பெரியதம்பிப்பிள்ளை அக்கல்வியைத் தொடரமுடியாத நிலையில் கல்முனை மெதடிஸ்த பாடசாலையில் ஆங்கிலம் கற்கச்சேர்க்கப்பட்டார். மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாசாலையில் ஆரம்ப வகுப்பில் கணபதிப்பிள்ளை சேர்க்கப்பட்டார். அக் கல்லூரிகளில் தங்கள் கல்வியைத் தொடரும் வாய்ப்பு இருவருக்கும் கிட்டவில்லை.

இக்காலத்தில் தம்பிமுத்துப் பிள்ளை என்பவரின் தொடர்பு பிள்ளைகள் இருவருக்கும் வாய்த்தது. தம்பிமுத்துப்பிள்ளை அவர்கள் மட்டுவிலுக்கும் மண்டூருக்குமிடையே இருவழித் தொடர்பாளராக மாறினார். மட்டுவிலில் வாழ்ந்த இவர் ஒரு புத்தக வியாபாரி ஆவார். தமிழ் மீது காதல் கொண்ட இவர் பக்திமானாகவும் இருந்தார். மண்டூர் முருகன் மேல் அவாக் கொண்டு கோயிலுக்குச் சென்ற போது அங்குள்ள அறிஞர்களோடு நட்புக் கொண்டார். அந்நட்பு ஏகாம்பரப் பிள்ளையின் மகனான பெரியதம்பிப் பிள்ளை வரை நீண்டது. அதே காலப்பகுதியில் நல்லூர் முருகன் திருவிழாவில் புத்தகம் விற்கச் சென்ற தம்பிமுத்துப் பிள்ளையுடன் புத்தக ஆர்வத்தால் கவரப்பட்ட கணபதிப்பிள்ளையும்

உடன் சென்றார். இச்சமயம் நாவலர் காவிய பாடசாலையைக் கண்டு கொண்டமை அங்கு கல்வி கற்கும் எண்ணத்தை மனதில் விதைத்தது. கணபதிப்பிள்ளை வண்ணார் பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அங்கமான காவிய பாடசாலையின் மாணவராவதற்கு ஒத்தாசை புரிந்த தம்பிமுத்துப்பிள்ளை அவர்களே பெரியதம்பிப்பிள்ளை அப்பாடசாலையில் இணைவதற்கும் கால்கோளிட்டார்.

1917 ஆம் வருடம் வடக்கும் கிழக்கும் இணைந்து கொண்டன. ஆமாம், வடமுனையின் கணபதிப்பிள்ளையும் கிழக்குக் கோடியின் பெரியதம்பிப் பிள்ளையும் கல்விச் சாலையில் சகபாடிகளாயினர். அக்கூட்டு அவர்களது எதிர் கால இலக்கிய இருப்புக்கு அடித்தளமிட்டது. தமிழ் மரபு வழிக் கல்வியின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி சைவசித்தாந்த, வேதாந்த எழுச்சிக்கும் வித்திட்டது எனலாம்.

மணிகள் இருவரினதும் காவிய பாடசாலைக் காலம் பெறுமதி வாய்ந்தது. அப் பாடசாலையில் பேரறிஞர் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் முதன்மை ஆசானாகவும் இருவரதும் குருமணியாகவும் வாய்க்கப் பெற்றார். அவரிடம் எழுதுகோல் பிடித்து, அவரின் அடிச்சுவட்டில் கால்கள் பதித்து, இலக்கிய வழியில் இருவரும் நடை பயின்றனர். குருதரிசனம் செய்யும் இவர்களின் பாங்கு இன்றைய மாணவர்களுக்கு நல்ல முன்மாதிரியாகும். ஆசான் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் வீடு தேடிச் சென்று நலம் விசாரித்து அவர்தம் பாதம் போற்றி கற்ற இவர்கள் குருவின் அன்புக்கும் ஆசீர்வாதத்திற்கும் உரித்துப் பெற்றனர். அன்னார் இறையடி எய்திய போது,

''அந்தமிலாக் கலைகள் பல எழுதி வைத்த
அம்புய நேர் திருக்கரமும் அந்தோ! அந்தோ!
இந்தனத்திற் செந்தழலில் உருகி வீய
யாமிதனைப் பார்த்திருத்தல் என்னே! என்னே! ''

எனப் பண்டிதமணியும்

''வண்ணத் தமிழ்க்கு வரம்பு வடமொழியின்
உண்மைத் தெளிவுக் குரையாணி - கண்மணியென்
சுன்னைக் குமார சுவாமிப் புலவரடி
சென்னிக் கியான்செய் சிறப்பு'' என்று புலவர்மணியும் மனமுருகிப் பாமாலை சூட்டினர்.

தமிழ் என்பது வெறுமனே கருத்துப் பரிமாற உதவும் ஊடகம் மட்டுமன்று; தமிழ் பரந்த, விரிந்த, ஆழ்ந்த, நுண்ணிய கருவூலங்களை உள்ளடக்கிய உயிர்ப்புக் கொண்டதோர் கருவி. இதனை உணர்ந்தே இருவரும் தமிழ் செய்தனர்.

புலவர்மணி காவிய பாடசாலையில் கற்ற காலத்தே பண்டிதர் மயில்வாகனம் அவர்களின் வீட்டுக்குச் சென்று மேலதிகமாகவும் கற்றார். இதனால் சிந்தனை வீச்சும் மன விசாலமும் அடைந்தார். பண்டிதமணி அவர்களும் நாவலரை நன்குணர்ந்தார்; அவர்பால் ஈடுபாடு மிகுந்தார். அதன் விளைவாக

பண்டிதமணி நாவலரின் ஞானப்பரம்பரையில் முகிழ்த்தார். புலவர்மணி விபுலானந்தரின் அறிவுத் தடாகத்தில் பூத்தார்.

அக்காலத்துப் பண்டிதர்கள் தனிப்போக்குடையவர்கள்; கடும் தமிழைக் கையாள்பவர்கள்; மக்களோடு உடன் போக்கு அற்றவர்கள்; செருக்கர்கள்; புதுமைக்கும் முற்போக்குக்கும் எதிரானவர்கள்; முன்னோர் மொழிந்தனவற்றை மாத்திரம் கிளிப்பிள்ளைப் பாடம் சொல்பவர்கள் என்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆளானார்கள். இக்குற்றச்சாட்டுக்களைத் தவிடு பொடியாக்கியவர்கள் மணிகள் இருவரும் ஆவர். அவர்களின் பேச்சிலும் எழுத்திலும் எளிமைத் தமிழே தவழ்ந்தது. பண்டைய மரபு புதுமைத் தமிழில் புளகாங்கித்தது.

மேனாட்டு இலக்கியத்திலும் ஆக்க இலக்கியத்திலும் கொண்ட ஈடுபாடும், ஆங்கிலப் புலமையாளர்களுடனான சங்கமிப்பும், சமகால சமுதாயத் தேவை கள் பற்றிய நோக்கும் ஏனைய மரபுப் பண்டிதர்களில் இருந்து இவர்களை வேறுபடுத்திக் காட்டின. பழமையைப் போற்றலும் நவீனத்தைத் தேடலும் இருவரதும் விருப்பமாயிருந்தன. பண்பாட்டு மரபுகளையும் வரலாறுகளையும் பின்னோக்கிப் பார்ப்பதும் ஆராய்வதும் பிற்போக்கு ஆகாது என்று கூறிய இவர்கள், இந்நூற்றாண்டின் போக்கையும் தர்மத்தையும் நன்கே தெரிந்து கொண்டு தமிழ் செய்தார்கள்.

தமிழ் மரபு வழிக் கல்வி வேரிலிருந்து விருட்சித்த இரு முத்து மணிகளதும் விழுதுகள் ஈழமண்டலமெங்கும் வியாபித்து நிற்பதும் அவர்களது கல்விப் பணியின் பெறுபேறே எனலாம். புலவர்மணி அவர்கள் இடைநிலைப் பாடசாலையிலும், உயர் நிலைக் கல்லூரியிலும் பின்னர் மட்டக்களப்பு புனித அகஸ்தீன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் தமிழ்ப் பணியாற்றியவர். பண்டிதமணி அவர்கள் திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் முப்பது ஆண்டுகள் அரும்பணி செய்தவர்.

பண்டிதமணியும் புலவர்மணியும் ஒரே விருட்ஷத்தின் இருகிளைகள், ஒரே கிளையின் இரு கனிகள், ஒரே கனியின் இருவேறு சுவைகள், சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாத இலக்கியப் பொக்கிஷங்கள். பண்டிதமணியின் கந்தபுராண த' காண்ட உரையும், புலவர்மணியின் பகவத்கீதை வெண்பாக்களும் இதற்குத் தக்க சான்றுகளாகும்.

புலவர்மணி இலக்கிய வித்தகர் விபுலாநந்தரின் வழிநின்று சமய சமரச சமத்துவ வேதாந்த நெறியில் வீறு கொண்டவர்; பண்டிதமணி ஆறுமுகநாவலரை அடியொற்றி சைவசித்தாந்த மறுமலர்ச்சியில் ஊறித் திளைத்தவர். 'உண்மை ஒன்று வழிகள் பல' என்பதனை முற்றும் உணர்ந்திருந்த இருவருக்கும் பேதம் இருக்கவில்லை. பண்டிதமணி இலங்கை வளத்தைப் போற்றி மகிழ்ந்தவர். சபுலவர்மணி இலங்கைமணித் திருநாட்டில் சிறப்புக் கண்டவர்.

புலவர்மணியைப் பண்டிதமணியிலிருந்து பிரித்துக் காட்டுவது அவரது சமூக நல நாட்டமாகும். அவரது எழுத்துக்களையும் பேச்சுக்களையும் கூர்ந்து நோக்குமிடத்து முற்போக்குக் குணாதிசயங்கள் முகிழ்ப்பதைத் தெளியலாம். பழைய மரபை உடைத்து நவீன சிந்தனைக்குள் நுழைந்த பண்டிதர்களுள் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் முக்கியமானவர். அவரின் வழித்தோன்றலாய் மிளிர்பவர் புலவர்மணி. அவர்கள் இருவரதும் புலமையின் மையமாக வேதாந்தமே இருந்தது. வேதாந்தம் குறுகிய சமய நோக்குக் கடந்த பரந்த பார்வையும் சமய சமரச மனப்பாங்கும் உடையது. மட்டக்களப்புச் சமூக பண்பாட்டுப் பாரம்பரியம் புலவர்மணிக்கு இத்தகைய பக்குவத்தை ஊட்டியது எனலாம்.

மட்டக்களப்புப் புலமைப் பாரம்பரியமானது. நாட்டார் பாரம்பரிய வழி, எழுத்துப் பாரம்பரிய வழி எனும் இரு கிளைகளையுடையது. இதில் எழுத்துப்பாரம்பரியகாரனாகப் புலவர்மணியை அடையாளம் காணலாம். அவரது கன்னியெழுத்தே ‘‘மண்டூர்ப் பதிகம்’’. மிகப்பால்ய வயதில் இயற்றப்பட்ட இந்நூல் மண்டூர் முருகன் மீது பாடப்பட்டது. மேலும், இவரது செய்யுள்களின் சிகரமாய்த் திகழ்வது ‘பகவத் கீதை வெண்பா’ ஆகும். அதனைக் கருமயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய மூன்று பகுதிகளாக எழுதினார். வாழி கல்லோயா நங்கை, கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரர் பதிகம், சித்தாண்டிப் பதிகம், மாமாங்கப்பதிகம், காளிகமடு கற்பக விநாயகர் ஊஞ்சல் என்பன இவரது செய்யுள் நூல்களாகும். பாலைக்கலி, குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், தன் சுயசரிதையான ‘உள்ளதும் நல்லதும்’ என்பன இவரது உரையாட்சிக்குத் தக்க சான்றுகளாகும்.

பண்டிதமணி அவர்கள் ஆறுமுக நாவலர் பரம்பரையின் சின்னம்; சைவமும் தமிழும் என்ற கருத்து நிலையின் அறிவுச்சுடர். எனவே அவரது எழுத்துக்களின் புலமை மையமாக சைவசமய சித்தாந்தமே மேலெழுகிறது. இவர் இலக்கிய வழி, பாரத நவமணிகள், சைவநற்சிந்தனை, கந்தபுராண கலாசாரம், இருவர் யாத்திரிகர், நாவலர் பெருமான், கம்பராமாயணக் காட்சிகள், அன்பினைந்திணை, அத்வைத சிந்தனை முதலான நூல்களையும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

தமிழைப் படித்துத் தமிழ் செய்து தமிழாகவே வாழ்ந்த புலவர்மணியின் ஆக்கங்களில் உணர்ச்சியில் எழுந்த தர்க்கத்தைக் காணலாம். பண்டிதமணியின் ஆக்கங்களில் தர்க்கத்தில் எழுந்த உணர்ச்சியைக் காணலாம்.

1951 ஆம் வருடம் சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ‘பண்டிதமணி’ பட்டம் சூட்டப்பட்டது. அதே வருடத்தில் மட்டக்களப்புத் தமிழ்க் கலாமன்றம் பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு ‘புலவர்மணி’ விருதினை வழங்கியது. 1952 ஆம் வருடம் ‘பண்டிதமணி’ என்ற விருது அவருக்கு கிடைத்தது. 1978 ஆம் ஆண்டு மே 31ஆம் நாள் இலங்கைப் பல்கலைக்கழகம் பண்டிதமணிக்கு ‘இலக்கிய கலாநிதி’ பட்டம் வழங்கிக் கௌரவித்தது. 1980இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புலவர்மணி அவர்களுக்கு ‘இலக்கிய வித்தகர்’ விருதினைச்

சூட்டி மகிழ்ந்தது. விருதுமாலை சூட்டப்பெற்ற இரு இலக்கிய மணிகளும் ஆடம்பரமற்ற, செருக்கற்ற, மானுட நேசர்களாக, நீர்மைத் தன்மையுடன், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராய் வாழ்ந்தனர். புலவர்மணி அவர்கள் 1978 ஆம் ஆண்டும் பண்டிதமணி அவர்கள் 1986 ஆம் வருடத்திலும் இயற்கையெய்தினர். தமிழ் இலக்கிய உலகிற்குச் செழுமை சேர்த்த மணிகள் இருவரும் ஈழத்துத் தமிழ் கூறு நல்லுலகினாற் போற்றப்பட வேண்டியவர்கள்.

## கிரகித்தற் பயிற்சி

1. இருவரும் காவியபாடசாலையில் ஒருமித்துக்கல்வி பயில்வதற்கான சந்தர்ப்பம் எவ்வாறு ஏற்பட்டது.?
2. ‘இருமணிகளினதும்’ தமிழார்வத்துக்கு அடிநாதமாகக் குடும்பச் சூழல் விளங்கிற்று’ இக்கூற்றை ஏற்றுக்கொள்வீர்களா? காரணம் தருக.
3. இருவருக்கும் இடையில் காணப்பட்ட ஒற்றுமைகளை (அட்டவணைப்படுத்தி) எழுதுக.
4. மரபுவழிக்கல்வியில் குருவை மதித்துப்போற்றும் பாங்கு இக்கட்டுரை யினூடாக எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.?
5. இருவருடைய ஆக்கங்களையும் பட்டியற் படுத்துக.
6. இருமணிகளின் ஆக்கங்களுக்கும் அடிப்படையாக இருந்தவை எவை? இவ்வேறுபட்ட அடிப்படைக்கான காரணங்களாக ஆசிரியரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவை எவை?
7. ‘பண்டைய மரபு புதுமைத் தமிழில் புளகாங்கித்தது’ என்று கட்டுரையாசிரியர் கூறக் காரணம் என்ன?

## செயற்பாடு

**குழுவாக இணைந்து பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.**

1. இக்கட்டுரையை உரையாடல் வடிவில் மாற்றி எழுதுங்கள்.
2. சுவாமி விபுலானந்தர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இருவரைப்பற்றிய தகவல்களையும் திரட்டுக. இருவருக்கிடையிலும் காணப்பட்ட ஒத்த தன்மைகள், வேறுபாடுகளை உளங்கொண்டு ஒப்பீட்டுக்கட்டுரை ஒன்று எழுதுங்கள்.

# இலக்கணம்

## எழுத்தின் பரம்பல்

எல்லா எழுத்துக்களும் சொல்லின் முதல், இடை, கடை, ஆகிய எல்லா இடங்களிலும் வருவதில்லை. எந்த எந்த எழுத்துக்கள் சொல்லின் முதலில் இடம்பெறும்; எந்தெந்த எழுத்துக்கள் சொல்லின் இறுதியில் இடம்பெறும்; சொல்லுக்கு இடையில் எந்தெந்த எழுத்துக்கள் எந்தெந்த எழுத்துக்களுடன் இணைந்து வரும் என்பவற்றைத் திட்டவட்டமாகக் கூற முடியும். இவ்வாறு சொல்லாக்கத்தில் எழுத்துக்கள் பயின்று வரும் முறைமையே எழுத்தின் பரம்பல் எனப்படுகின்றது. இதனை மூன்று வகையாக நோக்கலாம்.

- முதல் நிலை எழுத்துக்கள்
- இறுதி நிலை எழுத்துக்கள்
- இடைநிலை எழுத்துக்கள்

## முதல் நிலை எழுத்துக்கள்

♦ ஓர் எழுத்து சொல்லாக்கத்தில் முதலில் இடம்பெறுவதை முதல்நிலை எழுத்துக்கள் என்போம்.

12 உயிர் எழுத்துக்களும் சொல்லாக்கத்தில் முதல் நிலையில் வருகின்றன.

**உதாரணம் :-** அன்பு, ஆனந்தம், இதயம், ஈசன், உதயம், ஊக்கம், எண்ணம், ஏற்றம் , ஐயம், ஒற்றுமை, ஓரம், ஔவை

மெய்யெழுத்துக்கள் தனித்து மொழி முதலில் வரா. உயிர்மெய் ஆகியே முதலில் வரும்

வல்லின மெய்களில் ( க், ச், த், ப் ) ஆகிய நான்கும் 12 உயிர்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும். க் + அ = க

**உதாரணம் :-**

| | | |
|---|---|---|
| க | - | கருணை, காடு, கிரகம் கீதை, குரங்கு கூட்டம், கெண்டி, கேடயம், கை, கொலை, கோயில், கௌரி |
| ச | - | சதுரம், சாது, சிகரம், சீலம், சுடும், சூளை, செவிலி, சேவை, சைவம், சொல், சோகம் சௌக்கியம் |
| த | - | தழல், தாகம், திரை, தீது, துன்பம், தூபி, தென்றல் தேடல், தையல், தொண்டு, தோணி, தௌவல் |
| ப | - | பணி, பாரதம், பிணக்கு, பீடு, புதினம் பூர்வீகம். பெண், பேதை, பையன், பொறை, போது, பௌத்தம் |

மெல்லின எழுத்துக்களுள் ந், ம் ஆகிய இரண்டும் 12 உயிர்களுடன் இணைந்து சொல்லுக்கு முதலில் வரும் ந்+ அ= ந

**உதாரணம் :-** ந - நலம், நாங்கள், நிலவு, நீங்கள், நுதல், நூல், நெல், நேரம், நைடதம், நொண்டி, நோன்பு நௌவி( மான்)

ம - மகிமை, மாண்பு, மின்னல், மீண்டும், முனைவர், மூலை, மெல்லினம், மேடு மையம், மொழி, மோகம், மௌனம்

வ், ய், ஞ் ஆகிய மெய்கள் எல்லா உயிர் எழுத்துகளுடனும் சேர்ந்து முதல் நிலையில் வருவதில்லை. சில உயிர்களுடன் மட்டும் சேர்ந்து வருகின்றன.

வ்+ அ = வ

வகரம் உ, ஊ, ஒ, ஓ ஆகியவை தவிர்ந்த உயிர்களுடன் முதல் நிலையில் வருகின்றது.

**உதாரணம் :- வயல், வாய், விலை, வீடு, வெயில், வேலை, வையகம், வௌவால்**

யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய உயிர்களுடன் இணைந்து முதல் நிலையில் வரும்

**உதாரணம் :- யமன், யானை, யுகம், யூகம், யோசனை, யௌவனம்**

ஞகரம் ஆ உடன் இணைந்து மட்டுமே தற்காலத் தமிழில் முதல் நிலையில் வருகின்றது.

**உதாரணம் :- ஞாபகம், ஞாலம்,**

ட், ற், ர் , ல் ஆகிய மெய்கள் பிறமொழிச் சொற்களை எழுதும் போது முதல் நிலையில் வருகின்றன. ட் + அ = ட

**உதாரணம் :-**

- ♦ ட - டமாரம், டான்ஸ், டிசைன், டீசல்
- ♦ ற - றக்கு, றாத்தல், றேடியம்
- ♦ ர - ரசிகன், ராகம், ரீங்காரம்
- ♦ ல - லட்டு, லாந்தர், லிங்கம், லீலா

கிரந்த எழுத்துக்களில் ( ஜ, ஷ, ஸ, ஹ) ஆகிய எழுத்துக்கள் தற்காலத் தமிழில் முதல் நிலையில் வருகின்றன.

- ஜ - ஜமீந்தார், ஜாம்பவான், ஜனநாயகம்
- ஷ - ஷஷ்டி
- ஸ - ஸாஸ்திரம், ஸரஸ்வதி
- ஹ - ஹட்டன், ஹாசியம், ஹோமியோபதி

## இறுதி நிலை எழுத்துகள்

**எ, ஒ, ஔ** தவிர்ந்த ஏனைய உயிர்கள் சொல்லாக்கத்தில் இறுதி நிலையில் பயன்படுத்தப்படுகின்றன.

அ - பல, பெரிய, நல்ல
ஆ - வா, பலா, பூங்கா
இ - புலி, நன்றி
ஈ - தீ
உ - எறும்பு, பந்து
ஊ - பூ
ஏ - அவனே, நானே
ஐ - பானை, பூனை
ஓ - அறியாமலோ, நீயோ

மெய் எழுத்துக்களில் **ண், ம், ன்** ஆகிய மூன்று மெல்லினங்களும் **ய், ர், ல் ள், ழ்** ஐந்து இடையினங்களும் சொல்லாக்கத்தில் இறுதி நிலையில் வருகின்றன.

உதாரணம் -

**ண் - பண், ஆண்**
**ன் - மான், பொன்**
**ம் - மணம், நிலம்,**
**ர் - பயிர். தயிர்**
**ள் - மகள், வாள்**
**ய் - நெய், மெய்**
**ல் - நெல், கால்**
**ழ் - வாழ், மகிழ்**

தமிழ்ச் சொற்களில் வல்லின மெய்கள் இறுதி நிலையில் வருவதில்லை. ஆனால் தற்காலத்தமிழில்

- பிற மொழிச் சொற்கள்
- இடப் பெயர்கள்

- ஆட்களின் பெயர் என்பவற்றை எழுதும் போது வல்லின மெய்களும் இறுதி நிலையில் பயன்படுகின்றன.

**உதாரணம்** :-

| | | | |
|---|---|---|---|
| ♦ | க் | - | ஈராக், கேக், பாங்கொக் |
| ♦ | ச் | - | டோர்ச் |
| ♦ | ட் | - | டேவிட் |
| ♦ | த் | - | பாக்தாத் |
| ♦ | ப் | - | ஜோசப் |
| ♦ | ற் | - | பெப்பர்மின்ற் |

பிற மொழிச் சொற்களைத் தமிழில் எழுதும் போது கிரந்த எழுத்துகள் மொழிக்கு முதலில், இறுதியில் வரும்.

**உதாரணம்** :-

| | | |
|---|---|---|
| ஜ் | - | ஜோர்ஜ், கராஜ் |
| ஹ் | - | அல்லாஹ் |
| ஷ் | - | ராஜேஷ், ஜோர்ஜ்புஷ் |
| ஸ் | - | ஹரிஸ், டெனிஸ் |

## இடைநிலை மெய்மயக்கம்

மெய்யெழுத்துக்களுள்ளே தம்மோடு தாம் மயங்குவது உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும். க், ச், த், ப் இவை நான்கும் உடனிலை மெய்ம்மயக்கமாகவே வரும்.

**உதாரணம்** :- மக்கள் (க் ු க்)
பச்சை (ச் ු ச்)
பத்து (த் ු த)
கப்பல் (ப் ු ப்)

தம்மோடு பிறமெய்கள் மயங்குவது வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகும். ர், ழ் இரண்டும் வேற்றுநிலைமெய்ம்மயக்கமாகவே வரும்.

**உதாரணம்** :- பார்வை (ர் ු வ்)
வாழ்க்கை (ழ் ු க்)

ங், ஞ், ட்,ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன் இவையாவும் உடனிலையாகவும் வேற்றுநிலையாகவும் வரும்.

| உடனிலை | | வேற்றுநிலை | |
|---|---|---|---|
| அங்ஙனம் | (ங் ூ ங்) | பங்கு | (ங் ூ க்) |
| மஞ்ஞை | (ஞ் ூ ஞ்) | பஞ்சு | (ஞ் ூ ச்) |
| தட்டம் | (ட் ூ ட்) | கட்சி | (ட் ூ ச்) |
| எண்ணம் | (ண்ூ ண்) | வண்டு | (ண்ூ ட்) |
| முந்நூறு | (ந் ூ ந்) | பந்து | (ந் ூ த்) |
| அம்மா | (ம் ூ ம்) | அம்பு | (ம் ூ ப்) |
| கொய்யா | (ய் ூ ய்) | வேய்ங்குழல் | (ய் ூ ங்) |
| நல்லார் | (ல் ூ ல்) | செல்வம் | (ல் ூ வ்) |
| தெவ்வர் | (வ் ூ வ்) | தெவ்யாது | (வ் ூ ய்) |
| வள்ளல் | (ள் ூ ள்) | கள்வர் | (ள் ூ வ்) |
| பற்று | (ற் ூ ற்) | முயற்சி | (ற் ூ ச்) |
| மன்னன் | (ன் ூ ன்) | கன்று | (ன் ூ ற்) |

## பயிற்சி

01. 'ஈழத்தமிழன்னை தந்த இருமணிகள்' என்ற கட்டுரையில் இருந்து
    i. முதனிலை எழுத்து
    ii. இறுதி நிலை எழுத்து
    iii. உடனிலை மெய்ம்மயக்கம்
    iv. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பவற்றுக்கு மும்மூன்று உதாரணங்கள் தருக.

## மொழிவளம்

### அடுக்குத்தொடர்

அடுக்குத்தொடர் பற்றி ஏற்கெனவே தரம் 8 இல் கற்றுள்ளீர்கள். ஒரு சொல் மீண்டும் மீண்டும் வந்து (அடுக்கி நின்று) தொடர்தல் அடுக்குத் தொடர் எனப்படும். அடுக்குத்தொடரில் உள்ள சொற்களைத் தனித்தனியாகப் பிரிக்கலாம். பிரித்தால் பொருள் தரும் அடுக்குத் தொடர், அசை நிலைக்கு இரண்டு சொற்களாக அடுக்கி வரும். இசை நிலைக்கு இரண்டு, மூன்று, நான்கு சொற்கள் வரை அடுக்கி வரும்.

| | |
|---|---|
| வருக வருக<br>வாழ்க வாழ்க வாழ்க | } உவகை |
| அடி அடி<br>உதை உதை | } வெகுளி |



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

| | | |
|---|---|---|
| பாம்பு பாம்பு பாம்பு<br>நெருப்பு நெருப்பு | } | பயம் |
| போ போ போ<br>ஓடு ஓடு | } | விரைவு |
| ஐயோ ஐயோ ஐயோ<br>கெட்டேன் கெட்டேன் | } | அவலம் |
| அன்றே அன்றே | - | அசைநிலை |

### அடுக்கிடுக்குத்தொடர்

அடுக்குத்தொடர்களுள்ளே சில, முன்மொழி விகாரமடைந்து கூறவந்த பொருளை அழுத்திக் கூறவும் சிறப்பித்துக்காட்டவும் உதவுகின்றன. இவ்வாறு வருவனவற்றை அடுக்கிடுக்குத்தொடர் என அழைப்பர்.

| | | | |
|---|---|---|---|
| கன்னங்கரிய | (கரிய கரிய) | - | மிகக்கரிய |
| செக்கச்சிவந்த | (சிவந்த சிவந்த) | - | மிகச்சிவந்த |
| சின்னஞ்சிறிய | (சிறிய சிறிய) | - | மிகச்சிறிய |
| தன்னந்தனி | (தனித் தனி) | - | மிகத்தனி |
| நடுநடுங்கி | (நடுங்கி நடுங்கி) | - | மிகநடுங்கி |
| பென்னம் பெரிய | (பெரிய பெரிய) | - | மிகப்பெரிய |
| வெட்டவெளி | ( வெளி வெளி) | - | திறந்த வெளி |

## பயிற்சி

(i) பின்வரும் அடுக்குத் தொடர்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

1. அணு அணு
2. விடிய விடிய
3. சுடச் சுட
4. வண்ண வண்ண
5. வருக வருக
6. போ போ
7. நெருப்பு நெருப்பு
8. ஓட ஓட
9. பிடி பிடி
10. மணி மணி

(ii) பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான அடுக்குத் தொடர்களை வைத்து, வாக்கியங்களைப் பூரணப்படுத்துங்கள்.

1. உழவர்கள் வயலில் அறுவடை செய்த நெற்கதிர்களை............................. கட்டி பார ஊர்திகளில் ஏற்றினார்.
2. பண்படுத்தப்பட்ட வயல் வெளியில் பெண்கள் ....................................... நாற்றுக்களை நாட்டினர்.
3. வயல் வெளிகளிலிருந்த கொக்குகள் ....................................... பறந்தன
4. காலையில் எழுந்து கடவுளை வணங்குதல் ....................................... வந்த வழக்கம்
5. நூலகத்தில் புத்தகங்கள் ................................. வைக்கப்பட்டிருந்தன.

(iv) பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான அடுக்கிடுக்குச் சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புங்கள்.

1 ................................................ வண்ணப்பறவைகளைக் கண்ட சிறுவன் குதூகலித்தான்.
2. நள்ளிரவில்...................................செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்
3. கோவலன் இறந்த செய்தியைக் கேட்ட கண்ணகி................................... போனாள்
4. வயல் வெளி .................................. காட்சியளித்தது.
5. ........................................ வாகனங்கள் நகரவீதிகளில் பவனி வருகின்றன.